241

உ

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

OFFICE OF [illegible] JAN 1914 MADRAS

தொகுதி ரு. } பிரமாதீச ஷு கார்த்திகை மீ } பகுதி அ

## அன்பு.

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந் தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி யிடைப்படுத்தித் தறுகட்பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்துவருவினைகடீர்ப்பாம்.

அன்பு என்னுஞ் சொல்லை நாம் அடுத்தடுத்துக் கேட்கிறோம். சாதாரணமாக ஒருவர்க்கொருவர் கடித மெழுதுங்கால் தங்களன்பன் என்று எழுதுகிறார்கள். கற்றவர்கள் கல்லாதவர்கள் ஆகிய எல்லாரும் மிகச்சாதாரணமாக வழங்கி வரும் அன்பு என்னும் இச்சொல்லை நாம் பலமுறை கேட்டும் சொல்லியும் வருகிறோம். ஆனால் அந்த அன்பு எப்படி யுண்டாவது? எதற்கு உரியது? எத்தனை வகைப்படுவது? இதன் சக்தி என்ன? என்ற ஆலோசனை மட்டும் அநேகமாக நம்மவர் மனத்தில் வருவதில்லை. இவ்வாறு ஆலோசனை செய்து அன்பின் உண்மைத் தன்மையையும் உபயோகப்படும் முறையையும் செவ்வனே அறிந்து கொள்வோமானால் அதைப் பார்க்கினும் சிறந்த பொருள் வேறொன்றில்லையென்று உறுதி கூறலாம். ஒருவனுக்கு இம்மை மறுமை வீடு என்னும் மும்மைப் பயனும் தருதற்கு இந்த அன்பைத் தவிர வேறொன்று வேண்டுவதில்லை. ஆதலின் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்யப் புகுவாம்.

அன்பு எப்படி யுண்டாவது? நமக்கு ஏதாவது துன்பம் வந்த போது அதை நீக்கி நன்மை செய்பவர்கள் யாரோ அவர்களைக் காணுந்தோறும் நினைக்குந்தோறும் நம் மனத்தில் ஒருவித விருப்ப மாகிய பற்று (நெகிழ்ச்சி) உண்டாகும். நமக்கு நன்மை செய்த வர் அடுத்தடுத்து நம்முடன் பழகுவதாலும் அடுத்தடுத்து நன்மை செய்வதாலும் நமது பற்று நாளுக்கு நாள் அபிவிர்த்தி யடை யும். இந்தப் பற்று முதலில் தாயிடத்துச் செல்லும். தாயா னவள் குழந்தை பசியால் வாடியதறிந்து பால் கொடுத்தும் பிணி யால் வருந்துவதறிந்து மருந்து கொடுத்தும் தான் மருந்துண்டு பத்திய மிருந்தும் மற்றும் படாத பாடெல்லாம் பட்டும் குழ ந்தையைப் பரிபாலிக்கின்றாள். இதுபற்றி முதலில் தாயினிடத்துக் குழந்தையின் பற்றுண்டாகும். சிலநாட் செல்லவே நமக்கு நன்மை செய்பவர்கள் இன்னும் சிலருள ரெனக்கண்டு தந்தையிடத்து அக் குழந்தையின் பற்றுச் செல்லும். அவ்வாறே செவிலித்தாயரிட மும் சகோதர சகோதரிகளிடமும் பந்துக்க ளிடமும் உபாத்தியாய ரிடமும் சகபாடிகளிடமும் பற்றுண்டாகும். இவ்வாறு தனக்கெனக் கருதப்பட்ட ஆடையணி புத்தகமாதிய எல்லாப்பொருள்களிடத்தும் பற்றுண்டாகும். முடிவில் தாய் தந்தை முதலியவ ரெல்லாம் விட்டுத் தன்னையே கதியென்று நம்பிவந்த மனைவியிடத்தும் அம்மனைவி வயிற் றில்தன் அம்ஸமாகவே தோன்றிய மக்களிடத்தும் பரந்து செல்லும். பின்னர் தாய் தந்தை மனைவி மக்களைச் சார்ந்த சுற்றத்தாரிடமும், பழக்க முடையாரிடமும் செல்லும். இவ்வாறு நாளுக்கு நாள் பலரி டத்தே பரவிச் செல்லும் இயற்கை யுடையது அன்பு என்று தெரிகின்றோம். இங்ஙனம் யாதானுமோர் தொடர்பு பற்றித் தோன் றுவதாகிய மன நெகிழ்ச்சி தான் அன்பு என்று கூறப்படுவது. இது காட்சிப் பொருளன்று. இதனால் நிகழுஞ் செயல்களாலே தான் அறியப்படும்.

நளமகாராஜன் தன்னுருக்கரந்திருந்த காலத்தே தன் மக்களைக் கண்டவுடன் அவன் செயல்களை நினைத்தால் அன்பின் செயலை ஒரு வாறு அறியலாம். மக்களைக் கண்டவுடன் தான் உருக்கரந்திருப்ப தையும் வேறொரு அரசனுக்குத் தேர்ப்பாகனாக வந்திருப்பதையும் நாடு நகரங்களை யெல்லாம் இழந்து பிறர் பழிக்கும்படியான நிலை யடைந்திருப்பதையும் கருதாமல் அவன் என்ன செய்தா னெனில்

"மக்களைமுன் காணு மனநடுங்கா வெய்துயிரா
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காணீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்க ளென்றுரைத்தான்
வன்மக் களியானை மன்" என்பதாலும்

"தோன்று வகைகரந்துந் தோன்றலைக்கண் டுண்ணெகிழ்ச்சி
தோன்றநின்றான் முன்புநளன் சோமேசா—தோன்றுகின்ற
அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ளார்வலர்
புன்கணீர் பூசல் தரும்" என்பதாலும் அறியலாம்.

இதன் தோற்றம் ஒருவாறு அறிந்தாம். இனி இது என்ன செய்வது? என ஆராய்வாம். இதன் செயலை வரையறையிட முடியாது. எதையும் செய்ய வல்லது. மேல், கீழ், அவனது, என்னது என்ற பேதத்தை அறவே களைந்து விடுவது. இல்லறம் நடை பெறுதற்கு முதற்கருவி இதுவே. எத்தனை பொன், பூமி, ஏவலர் இருப்பினும் இல்லறம் நடத்தும் தலைவனிடம் அன்பு இல்லையாயின் அது சிறிதும் நடவாது. உடலின் பயனாவது அன்புதான். அன்பு இல்லாத வுடம்பு மாமிசக்கட்டே யல்லது வேறில்லை. அறவோர்க்களித்தல் அந்தணரோம்பல் துறவோர்க் கெதிர்தல் விருந்தெதிர் கோடல் ஆதிய இல்லறத்துச் செய்யும் எல்லாச் செயலுக்கும் அன்பே முதலில் வேண்டப்படு பொருளாகும். அன்பு இல்லையேல் இவற்றில் ஒன்றும் நடைபெறாது. இதனை

"அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு"

"இடனும் பொருளு மேவலரு மிருந்தும் பயனென் னேவந்த
உடலின் பயனாகிய வன்பை யுறாத விடத்து நொதுமலரும்
படர்செய் பகையு முறவாக்கும் பற்று மளிக்கு மனைமைந்தர்
தொடர்பின் வளர்க்கு மன்பதனாற் சோர்ந்து மன்பின் வழுவற்க."

"புறத்துறுப் பெல்லா மெவன்செய்யு மியாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு." என்பவற்றானறிக.

இன்னும் இந்த அன்பானது தனக்கென்னும் பற்றை வேரோடு களைந்து எல்லாப் பொருள்களையும், முடிவில் தன் உடல் உயிர்களையும்

பிறர்க்குத் தூத்தம் செய்விப்பது. இல்லறத்திலிருக்குங்கால் மனைவி மக்கள் உறவினராதியருடன் உறவு பாராட்டிச் சகல சௌக்கியங்களையும் அனுபவித்துப் பின்பு சுவர்க்க போகமோக்ஷங்களையும் அனுபவிக்கச்செய்வது. துறவறத்திற் சென்று ஐம்புலவொடுக்கத்தானும் விரதம் தவம் முதலிய வற்றானும் உடலை வாட்டி வருந்திச்சுவர்க்காதி இன்பமட்டுங் கொள்ளுதலினும் இல்லறத்திலிருந்து இருமையின்பமுங்கொள்ளப் புரிதலால் மிக்க சிறப்புறுதற்குரியது. இதனாற்றான

"அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு."
"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு" என்றார் தேவர்.

சிபிச்சக்கரவர்த்தி ஒரு புறவுக்காகத் தன்னுடலை யறுத் தறுத்துக் கொடுத்ததும், ததீசி முனிவர் இந்திரனுக்காகத் தன் முதுகந் தண்டைக் கொடுத்ததும் "அன்புடையார் என்பு முரியர் பிறர்க்கு" என்ற பொய்யா மொழியை வலியுறுத்துவனவாம். ஸ்ரீராமபிரான் வேடர்குலத்துக் குகனையும், வானர வர்க்கத்துச் சுக்கிரீவனையும் ராக்ஷத வமிசத்து விபீஷணனையும் சகோதர வுரிமை பாராட்டச் செய்தது யாது? இந்த அன்புதானன்றோ? இது மன நெகிழ்ச்சியின் ஏற்றத்தாழ்வுக் கேற்ப தலையன்பு இடையன்பு கடையன்பு என மூன்று விதப்படும்.

தலையன்பாவது: நாயகனது பெயர் குணம் முதலியவற்றைப் பிறன்கூறக் கேட்டவுடன் நாயகியானவள் மனங் குழைந்து இன்பமெய்து நிலையாம்.

சீதாபிராட்டி இலங்கையில் அசோக மரத்தடியில் வசித்துத் துக்க மிகுதியால் தன்னுயிர்விடுப்பக் கருதியிருக்குஞ் சமயத்தில் அனுமன் சென்று ராமராம என்று கூறியவளவில் தனது நாயகன் பெயர் கேட்டலும் தன்னுயிர் நீத்தலை விடுத்து மனமகிழ்ச்சியடைந்தாள் என்பதை

"அரக்கனே யாக வேறோ ரமரனே யாக வன்றிக்
குரக்கினத் தலைவ னேதா னாதுக கொடுமை யாக

விரக்கமே யாக விங்ங னெம்பிரா னுமஞ் சொல்லி
யுருக்கின னுணர்வு தந்தா னுயிரிதி னுறுதி யுண்டோ"

எனக் கூறுமாற்ருற் றெளியலாம். அன்றியும்

திருஞானசம்பந்த சுவாமிகள் பொய்கைக் கரையில் அழுது கொண்டிருந்ததைக் கண்ணிற் கண்டு பால் கறந்தூட்டிய உமாதேவி யாரைப் பார்க்கினும் இதனைக் கேள்வியுற்றவுடன் முலைசுரந்த மங்கை யர்க்கரசியாரின் அன்பு சிறந்ததா மென்று விளங்கும்படி

சுரந்த திருமுலைக்கே துய்யதிரு ஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த
தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையா ளன்பிருந்த வாறு. எனவும்,

இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ முன்னின்—னிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
விங்குயர்ந்தா ரார்சொ லெனக்கு. எனவும் பெரியார் கூறிய ருளுவதும் காணலாம்.

இடையன்பாவது:—நாயகனைக் கண்ட விடத்தே நாயகியான வள் முன் நாயகன் மாட்டுத் தான் கொண்ட கோபஞ் சிறிதுந் தோ ன்ருமல் மகிழ்ந்து கூடுதலாகும். இதனை

"பேணுங் கொழுநர்பிழையனைத்தும்பிரிந்தபொழுதுநினைந்தவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர் கனகக்கபாடந் திறமினோ."

என்பதாலறியலாம்.

கடையன்பாவது :—நாயகன்வந்து இன்சொற்கூறிக் கலந்த போது நாயகியானவள் மனமுருகிப் பரவசப்படுதலாம். ஆகவே கேள்வியால் மனமிளகுவது தலையன்பெனவும், காட்சியால் மன மிளகுவது இடையன்பெனவும், ஸ்பரிசத்தாலும் இன்சொற்களா லும் உவப்பன செய்தலாலும் மனமிளகுவது கடையன்பெனவும் ஒருவாறு கூறத்தகும்.

இது செல்லும் இடம்பற்றி வேறு வகையாகவும் பகுக்கப் படும். அங்ஙனம் பகுக்கப்பட்டபோது வேறு பெயராற் கூறவும்படும்.

1. பாச அன்பு—இதுதான் இதுகாறுஞ் சொல்லப்பட்டபடி தாய்தந்தையராதிய தொடர்புடையாரிடத்து நமக்குளதாகும் மன நெகிழ்ச்சி. இச்சமயத்தில் இதற்குப் பெயர் பற்று.

2. பசுவன்பு—தொடர்புடையாரிடத்துச் சென்று சென்று பழகிய பாசவன்பானது வரவரப் பக்குவப்பட்டு முதிர்ந்து யாதொரு தொடர்புமில்லாத ஏதிலாரிடத்தும் பகைவரிடத்தும் எல்லாவுயிர்களிடத்தும் ஒரு படித்தாகச் செல்லத் தொடங்கும். இந்த நிலையில் இரக்கம், கருணை, அருள் என்பனவாதிய பெயர்பெறும். சகல சீவர்களிடத்தும் செல்லும் மன நெகிழ்ச்சியாகிய அருளென்பது அன்பினது முதிர்ந்த நிலையேயாகும். காய் கனி என்பது போலச் சொல்வேறு படுவதல்லது பொருள் வேறுபாடில்லை. நட்பு பகை நொதுமல் என்னும் பேதம் பற்றாது செல்லும் நிலையாதலின் இதனைத் துறவறத்திற்குச் சிறந்த வுரிமைப்படுத்திக் கூறுவர். அன்பின் முதிர்ச்சியே யருளாதல் பற்றி அன்பைத் தாயாகவும் அருளைக் குழவியாகவுங் கொண்டு "அருளென்னு மன்பீன் குழவி" என்பர் பொய்யில் புலவர். இது துறவறத்திற்கு உரியதென்பதால் இல்லறத்திற்கு வேண்டாவோ வெனின் வேண்டப்படுவதேயாம் என்பதை

"அன்பும் அருளும் தாங்கி யின்சொலின்
விருந்து புரந்தந் தருந்தவர்ப் பேணி".

என இல்லறத்தார்க்கும் வேண்டுமெனக் கூறுமாற்றாலறிக. இல்லறத்திற்கு எல்லாப் பொருள்களினும் அன்பே சிறந்த கருவியாதல் போல் துறவறத்திற்கு விரத செப தவ முதலிய எல்லாவற்றினும் அருளே சிறந்த கருவியாதல் பெறப்படும். முற்றத்துறந்த தாயுமானவர்

"எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
றெய்வ வருட்கருணை செய்வாய் பராபரமே." என்றருளினர்.

"யான் பெற்ற இன்பம் பெறுக விவ்வையகம்" எனவும், "தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாருஞ் செகத்தீரே," எனவும் கூறுமாற்றால் எல்லாவுயிர்களும் இன்பமடைய வேண்டும் என்று சகலவுயிர்களிடத்தும் பரந்து செல்லுவதாகிய கருணையே பசுவன்பாம்.

பாச அன்பாகிய பற்று இல்லறத்தார்க்குச் சிறப்புரிமையும், பசுவன்பாகிய கருணை துறவறத்தார்க்குச் சிறப்புரிமையும் கொண்டுள்ளன. இந்த அருளின் தன்மையை

ஆருயிர் யாதொன் றிடருறி னுங்கதற்
கோருயிர் போல வுருகி யுயக்கொள்ள
நேரி னதுமுடி யாதெனி னெஞ்சகத்
தீர முடைமை யருளி னியல்பே. என்பதாலறியலாம்.

பிறவுயிர்கட்கு இடுக்கண் செய்யாமையும், பிறவுயிர்கட்கு வரும் துன்பத்தை நீக்கலும், பிறவுயிர்கட்கு நன்மை செய்தலும் அருளின் செயல்களாகக் காணப்படும். விரிக்கிற் பெருகும். இதன் விரியைப் பின்னர் விளக்குவாம்.

3. பதியன்பு :—இது நூலுணர்ச்சியானும் குரு உபதேசத்தானும், பூர்வபுண்ணிய வசத்தானும், இறைவன் றிருவருள் விசேடத்தானும் கடவுளிடத்துச் செல்வது. இதற்குத்தான் பக்தி என்னும் பெயர். குருவினிடத்தும் சாபாநுக்கிரக சீலரான தவசிரேஷ்டரிடத்தும் செல்லுங்காலும் உயர்வு பற்றிப் பக்தி யென்று கூறலுமிழுக்காது. பிஞ்சு, காய், கனி யென்பதுபோல பற்று, இரக்கம், பக்தி எனப் பெயர் பெறுதலடையினும் அன்பு அல்லது மனம் நெகிழ்தல் என்ற மூலம் ஒன்றுதான். ஆதலின் அன்பு என்ற பதத்தைப் பொதுப் பெயராகவும், பற்று, இரக்கம், பக்தி என்ற பெயர்களைச் சிறப்புப் பெயர்களாகவும் கொள்ளவேண்டும்.

முதலில் தனக்கு நன்மை செய்பவர்கள் எனக்கருதிச் சென்ற மனப் பற்றுனது தாய் தந்தை யுறவினராதிய பலர்பாற் சென்று பழக்கமிகுதியால் தனக்கு நலஞ் செய்தவர்கள் செய்யாதவர்கள் என்ற பாகுபாட்டைக் கடந்து யாரொருவர் வருந்தக் காணினும் அவரிடத்து இரக்கமெய்தித் தானே முந்தி யுபகரிக்கப் புகும். இவ்வாறு புகுந்து வருங்கால் நூலுணர்ச்சியால் அறிவு முதிர்ச்சி பெற்று "தந்தையார் தாயார் உடன்பிறந்தார் தாரமார் புத்திரரார் தாந்தா மாரே, வந்தவா றெங்ஙனே போமா றேதோ" என ஆராய்ச்சி நிகழும். அது நிகழவே தாய்தந்தையராதியரன்பானது நீர்க்குமிழி போல நிலையற்றதான உடம்பின் தொடர்ச்சியாலுண்டான

காதலின் இவ்வுடம்பொழியவே அதுவும் ஒழியும். "அன்னையெத்தனை யெத்தனை யன்னையோ அப்பனெத்தனை எத்தனையப்பனோ" என்றவாறு இவரும் அளவிடற் பாலரல்லரே. அன்றியும் நாம் தீவினைப் பயனையநுபவிக்குங்கால் இவ்வுறவினரும் பகைவராகின்றனர், நாம் நல்வினைப் பயனை அனுபவிக்குங் கால் இவரல்லாத பகைவரும் நோதுமலரும் உறவாகின்றனர். மேலும் இவர் நமக்கினியவராகிநிற்பதும் தம்பயன் குறித்தன்றி எம்பயன் குறித்தன்றே. ஆதலின் இவர் நமக்கு இதஞ் செய்தற் குரியரல்லர். ஏனைய பொன் பூமி வாகனாதி சகல பொருள்களும் நமக்குப் பயன் செய்யச் சக்தியற்றனவே. இவையெல்லாம் பொய்த் தோற்றத்தனவேயாகும். ஆகவே நமக்கு நாமே இனியம். நம்மை நாம் ஒருகாலும் பகைத்திலம். நமக்கு நன்மை யுண்டாக நாம் எப்போதும் நாடுவம். ஆதலின் நாமே நமக்கு இனியம் எனக்கொள்ளின் அதுவும் பொருந்தாது. என்னை? கேவலாவத்தையில் ஆணவமலமறைப்பால் அறிவுந் தொழிலும் விளங்கப் பெறாமையாலும், சகலாவத்தையில் அறிவுந் தொழிலும் சிறிது விளங்கப் பெறினும், அவை சிற்றறிவுஞ் சிறுதொழிலுமேயன்றி முற்றறிவு முற்றுத் தொழிலு மன்மையாலும், நமக்கு நன்மையிது தீமையிதுஎன அறிந்து நினைந்தவாறு நன்மை யடையக் கூடாமையானும் மற்றும் பல காரணங்களாலும் நமக்கு நாமும் இனியமல்லோம். ஆதலின் முற்றறிவும் முற்றுத் தொழிலும் பேருளுமுடைய இறைவர் ஒருவரே நமக்கு இனியராதல் வேண்டும். அவரே நமக்கு நன்மை செய்பவர். அவரைத் தவிர வேறு பொருளில்லை. என ஆராய்ச்சி வகையானறிந்து தெளிந்து

"கனியி னுங் கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளுமர சினும்
இனியன் றன்னடைந் தார்க்கிடை மருதனே".

"என்னின் யாரு மெனக்கினி யாரிலை
என்னி னும்மினி யானொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே" என்னும் பெரியார்

திருவாக்கைக் கடைப்பிடித்து இறைவனிடத்தே செலுத்தப்படும் அன்புதான் பக்தியெனப்படுவது.

இத்தகைய பக்தியானது மனத்தின் பரிபக்குவ பேதத்தால் நான்கு வகைப்படும்.

(1) மந்ததரபக்தி:—அரக்கானது வெயிலில் இளகுவது போல்வது. சிவசரித்திரங்களைப் பலகால் கேட்டும் சிவனடியாரோடு பலகாற் பழகியும் வருதலால் மனத்தே தோன்றும் சிறு நெகிழ்ச்சியே மந்ததர பக்தி யெனப்படும்.

(2) மந்தபக்தி.—மெழுகு வெயிலில் இளகுவது போல்வது. சிவசரித்திரங்களைச் சிலகாற் கேட்டும் சிவனடியார்களைச் சிலகாற் கண்டு பழகியும் வருதலால் மனத்தே தோன்றுவதாகிய நெகிழ்ச்சியே மந்தபக்தியெனப்படும்.

(3) தீவிரபக்தி.—நெய் சூடுபட்டவுடன் இளகுவதுபோல்வது. சிவசரிதங்களைக் கேட்குந்தோறுஞ் சிவனடியார்களைக் காணுந்தோறும், சிவசாதனங்களைப் பூணுந்தோறும், சிவாலிங்கங்களை எண்ணுந்தோறும் மனத்தே சட்டெனத் தோன்றுவதாகிய நெகிழ்ச்சியே தீவிர பக்தி யெனப்படும்.

(4) தீவிரதரபக்தி.—தைலதாரைபோல்வது. எந்தக்காலத்தும் இடையறவுபடாது மனம் இறைவனிடத்தே செல்லவும், கண்கள் இறைவனடியார்களைக் காணவும், செவிகள் சிவசரித்திரங்களைக் கேட்கவும், இவ்வாறே எப்பொழுதும் இறைவனிடத்தே எல்லா இந்திரியங்களும் பற்றி நிற்கும் நிலையே தீவிரதரபக்தி யெனப்படும்.

"ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்க ணான்குஞ், சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமே யாக, இந்துவாழ் சடையா ராடுமா னந்த வெல்லையி றனிப்பெருங் கூத்தின், வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

என்ற வாறு நிற்கும் நிலையே தீவிரதரபக்தியாம்.

இத்தகைய பக்தியானது பற்பல பிறவிகளிலே கலைஞானத்தால் உலகத்தை யுவர்த்து எல்லாப் பற்றையும் விட்டு இறைவனிடத்தே மனத்தைச் செலுத்தி வருதலால் சிவபுண்ணிய மேலிட்டு இறைவன் திருவருட்குப் பாத்திரமாகிப் பூரணப்படவேண்டும்.

இதனை "அவனருளாலே யவன்றாள் வணங்கி" எனவும், "ஆங்கவ னருளாற் பத்திநன் குண்டாம் பத்தியா லவனரு ளுண்டாம், வீங்கிய பத்தி பற்பல பிறப்பில் வேதங்க ளுரைத்திடும் படியே, தீங்கறு கரும மியற்றிய பலத்தாற் சிவனருள் செய்திட வருமால், ஓங்கிய பத்தி யாற்சிவ தரும மொழிவறப் புரிந்திடப் படுமால்" எனவும்,

"அற்றுமன் றறியச் சுருங்கயா னுரைப்ப னுயிழைபாகன்வார் கழலிற், றெற்றென வறிவாற் பத்திமை யெய்தல் வேண்டுமாற் சிறந்த பத் திமையால், மற்றிணை யில்லா முத்தியெய் திடுமான் மாசிலா தாய பத் திமையும், முற்றிழை பாக னருளினா லெய்தல் வேண்டுமான் மொழிந்திடுங் காலே."

எனவும் வரும் பெரியார் திருவாக்குக்கள் வலியுறுத்தாநிற்கும்.

பத்தியென்பது முதலில் நூலாராய்ச்சியாற் றெளிந்து செய்யப்படுவதாயின் கண்ணப்பநாயனார் ஒப்புயர்வற்ற பத்தி யெய்தப் பெற்றவரன்றே, அவர் நூலாராய்ச்சி செய்ததாகக் கேட்டிலம், ஆதலினிம்முறை பொருந்துமா றில்லையாலோ எனின்? அன்றன்று. இவர் பூர்வ ஜன்மத்தில் பாண்டவ ரைவருள் நடுமணிபோன்ற அருச்சுனவதார மூர்த்தியாதலால் கண்ணபிரானிடத்தே அறநூற் பொருள்களைக் கேட்டுத் தெளிந்து நற்றவ சீலராகி யிருந்தவ ராதலின் அதன் றொடர்ச்சி இச்சன்மத்தில் வந்து கைகூடிய தென்பதை

"முன்புசெய் தவத்தி னீட்ட முடிவிலா வின்ப மாய
அன்பினை யெடுத்துக் காட்ட வளவிலா வார்வம் பொங்கி
மன்பெருங் காதல்கூர வள்ளலார் மலையை நோக்கி
யென்புநெக் குருகி யுள்ளத் தெழுபெரு வேட்கை யோடும்"

என்னும் சேக்கிழார் சுவாமிகள் திருவாக்காற்றெளிக. அன்றியும்

"வீங்கிய பத்தி பற்பல பிறப்பில் வேதங்க ளுரைத்திடும் படியே
தீங்கறு கரும மியற்றிய பலத்தாற் சிவனருள் செய்திட வருமால்"

என முன்னர் எடுத்துக் காட்டியதும் கவனித்தற் பாலதாம்.

இனி இதன் சக்தி மிகவும் பெரிது. உலகமுழுதும் தன்வசப் படுத்துவது. சகலநன்மைகளையும் தருவது. சிறிதும் பேதமற்றது. இறைவனை விரைவிற் கூட்டுவிப்பது. இறைவனுந் தானும் அபேதமாகுந் தன்மையைத் தரத்தக்கது. சுருக்கிச் சொல்லுமிடத்து எல்லாப் பேற்றையும் எளிதிற் றருவது இதுவேயாம். இந்த உண்மையை அடியில் வரும் திருப்பாசுரங்க ளினிது விளக்குவனவாகும்.

ஆரேனு மன்புசெயி னங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணு வரன்.

அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலார்
அன்பு சிவமாவ தாரு மருகிலர்
அன்பு சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா வமர்ந்திருப் பாரே.

கருமமா தவஞ்செ பஞ்சொல் காசறு சமாதி ஞானம்
புரிபவர் வசம தாகிப் பொருந்திடோம் புரையொன் றின்றித்
திரிவறு மன்பு செய்வோர் வசமதாச் சேர்ந்து நிற்போம்
உரைசெய்வோ மவர்மு னெய்தி யவருளத் துறைவோ மென்றும்.

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத் தமுதே, யூறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி யுள்ளவா காணவந் தருளாய், தேறலின் றெளிவே சிவபுரத் தரசே திருப்பெருந்துறையுறை சிவனே, யீறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே என்னுடை யன்பே.

இன்னும் பத்தியின் பெருமையைக் கூறப்புகின் மிக விரியும். சிவானந்த லகிரியில் கூறப்பட்ட ஒரு விஷயத்தை மட்டுங் கூறுவாம். வழியிலிடப்பட்ட செருப்பானது பசுபதியின் றிருமேனிக்குக் கூர்ச்சமாகின்றது. வாய்நிறைந்த நீரால் நனைத்தல் புரப்பகைவருக்குத் திவ்வியாபிஷேக மாகின்றது. சற்றே புசிக்கப்பட்ட மாமிச சேஷத்தின் கவளமானது திவ்யோபகார மாகின்றது. வனசரன் பக்தசிரேஷ்டனாகின்றான். பத்தி எந்தத்தான் செய்கின்றலது.

பக்தியின் பெருமைக்கு இதைவிட வேறு கூறவும் வேண்டுமோ? இக் கண்ணப்ப நாயனுர் செய்கை முற்றும் உலகத்தார் வெறுக்கத் தக்கனவாம். இவ்வாறே சண்டேசநாயனுர் தந்தை காலை வெட்டியதும் வெறுக்கத்தக்கதாம். இங்ஙனமே பக்தி மேலிட்டார் செயல்கள் ஒப்பத் தக்கனவா யில்லையே. இவர்கட்கெல்லாம் இறைவ னருள்புரிந்தமை பொருந்துமா? எனக் கருதவேண்டாம். இப்பெரியார்க ளெல்லாம் பசுபோதங்கெட்டு சிவபோத மேற்பட்டு நின்ற புண்ணிய மூர்த்திகளே யாதலின் இவர்கள் செய்வன யாவும் பரம கருணுநிதியாகிய சிவபெருமான் றிருவுள்ளத்துக்கு உகந்தனவேயாம். இறைவர் திருவுள்ளத்துக்கு உவப்பான செயல்களைப் பற்றி உலகத்தார்கள் உவந்தாலென்? வெறுத்தாலென்? யானென்னும் அகப்பற்றும் எனதென்னும் புறப்பற்றும் அற்று அவனே தானுய் நிற்கும் இந்த மஹான்களை விதிவிலக்குகள் பந்திக்கமாட்டாவென்க. இதனை

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு மண்டத் தொடுமுடனே
பூதலத்தோர்கள் வணங்கப்பொற் கோயிலும் போனக மும்மருளிச்
சோதி மணிமுடித் தாமமு நாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

என்பதாலறிக. அன்றியும்

கண்ணப்பநாயனுர் காளத்திநாதர் முன்பு நின்று தம் வாய் நீரால் அபிஷேகஞ் செய்து தமது தலையிலுள்ள மலரால் அலங்கரித்து தாம் சுவைத்துப்பார்த்த ஊனை நிவேதித்துச் சென்றபோது இந்த அலங்கோலத்தைக் கண்டு மனம் இடிந்து பதைத்த சிவகோசரியார் ஆறுதலடையும்படி காளத்தி நாதர் சிவகோசரியாருக்குக் கட்டளையிடு மிடத்து

அவனுடைய வடிவெல்லா நம்பக்க லன்பென்றும்
அவனுடைய வறிவெல்லா நமையறியு மறிவென்றும்
அவனுடைய செயலெல்லா நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வா றறிநீயென் றருள்செய்வார்.

எனத் திருவாய் மலர்ந்ததும் பிறவும் நோக்கினுல் உண்மையன்பின் பெருமை தெள்ளிது புலனுகும்.

காரைக்காலம்மையார் அன்பு கசிந்து என்புருவம் பெற்றுக் கயிலைக்குச் செல்லுங்கால் அதுகண்ட உலகத்தார் ஓ ஓ ஈதென்ன பேய்வருகிறதென்று திகைப்பும் பயமுங் கொண்டோடுவாராக அம்மையார் இறைவர் என்னை அறிவராயின் உலகத்தார் அறிந்தாலென் அறியாதொழியிலென்? என்னை யறியவேண்டியவர் இறைவரொருவரே எனக்கூறிச் செல்லுந் திடபக்தியைப்பாராட்டாதாருமுண்டோ?

கண்டவர் வியப்புற் றஞ்சிக் கையகன் றோடு வார்கள்
கொண்டதோர் வேடத் தன்மை யுள்ளவா கூறக் கேட்டே
அண்டர்நா யகனு மென்னை யறிவரே லறியா வாய்மை
எண்டிசை மாக்க ளுக்கியா னெவ்வுரு வாயென் னென்பார்.

என்னுந் திருவிருத்தம் இவண் சிந்தனைக்குரிய தொன்றும்.

உண்மை யன்புடையவர்கள் எக்குலத்தவராயினும் எவ்வேடத்தவராயினும் எத்தொழிலினராயினும் அவர் இறைவனோடு இரண்டறக் கலப்பதாகிய முத்தி யின்பத்தைப் பெறுவர்.

மனத்தினிடத்து மெய்யன்பு கொள்ளாதவர் எந்த வுயர்குலத்திற் பிறப்பினும் எத்தனை சிவசாதனங்களைப் பூணினும் எத்தனை தீர்த்தங்களால் அபிஷேகஞ் செய்யினும் எத்தனை கனிவர்க்கங்களை அமுதுவர்க்கங்களை நிவேதிப்பினும் எத்தனை தோத்திரங்களைப் பாடினும் எத்தனை மந்திரங்களைச் செபிப்பினும் எத்தனை தானதருமங்களைச் செய்யினும் எத்தனை சிவாலயங்களைக் கட்டுவிப்பினும் அவரிடத்தில் இறைவன் றிருவருள் சேர்தலில்லையென்பது அடியில் வரும் பிரமாணங்களா லறியப்படும்.

ஆசறு மனத்தெழு மன்பை யன்றியே
பூசனை யுவக்கிலன் புராரி சென்னிமேல்
வீசுறு திரையினு மிக்க தோசொலாய்
ஊசல்கொண் மனமுடை யொருவ னூட்டுநீர்.

என்பே விறகா விறைச்சி யறுத்திட்டுப்
பொன்போ லெரியிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை யெய்தவொண் ணாதே.

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் ஞர்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்ப னவர்தமை நாணியே.

அன்பேயென் னன்பேயென் றன்பா லழைத்தழைத்திட்
டன்பேயன் பாக வறிவழியும்—அன்பன்றித்
தீர்த்தந் தியானஞ் செபதவங்கள் செய்யுமது
சாத்தும் பழமன்றே தான்.

தேவ தேவன்மெய்ச் சேவகன் றென்பெருந் துறை நாயகன்
மூவ ராலு மறியொணுமுத லாய வானந்த மூர்த்தியான்
யாவ ராயினு மன்ப ரன்றி யறியொ ணமலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவ டிக்கணஞ் சென்னி மன்னிச் சுடருமே.

எனப்பலவாம். எல்லாவுயிர்களும் விரும்பற்பாலன இகபரஇன்பங்களேயாம். அவ்வின்பங்களை யருள்புரியு முதல்வன் உயிர்க்குயிராகிய சிவபிரானேயாம். சிவபிரானையறிந்து அடைவார்க்கு மனவாக்குக் காயங்கள் உண்மைப்பத்தி வழியில் வருவனவாம். அத்தகைய பத்திவழி வருவார்கட்கு சிவனடியார்கள் திருவேடமே சிவபெருமான் றிருமேனியாக நின்று துன்பந்தவிர்த்து இன்பந் தந்தருளும் எனவும் அதனுல் சிவபத்தரிடம் அன்புசெலுத்த வேண்டுவது முக்கியமானதெனவும் கூறுவார் பெரியோர். இதனை

எனைத்துயிர்க்கு முறுதியிக பரமென்ப வவைகொடுப்பா னெல்லாந் தானு, யனைத்துயிர்க்கு முயிராகு மரனென்ப வவனறிவார்க்கங்கம் வாக்கு, மனத்துறுமெய்ப் பத்திவழி வருமென்ப வப்பத்தி வழிநிற் பார்க்கு, வினைத்துயர்தீர்த் திடவெடுத்த வடிவென்ப தவனடியார் வேட மன்றே.

அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டனையேல்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே.

என்னும் இத்தகைய மெய்ஞ்ஞானிகள் திருவாக்கைக் கடைப்பிடித்து இறைவனிடத்தும் அடியாரிடத்தும் அன்பு செலுத்திப் பேரானந்தப் பெருவாழ்வு பெறுவோமாக.

பத்திராதிபர்.

# கமலினி.

(உகஅ-ம் பக்கத் தொடர்ச்சி.)

**அங்கம் II களம் 5.**

*இடம்: ஷை அரண்மனையில் சக்ரவர்த்தி படுத்திருக்கு மறை. காலம்: காலை.*

*(சக்ரவர்த்தியின் கட்டிலுக்குச் சமீபத்தில் சக்ரவர்த்தினி அழுதுகொண்டு உட்கார்ந்திருக்கிருள்.)*

**சக்ரவர்த்தினி**:—ஏ! மீனும்பிகை! என்னை இக்கதிக்காளாக்கிவிட்டனையே. பரம்பரையாய் இவ்விராஜ வம்சத்தவர் உன் சன்னிதானத்திற்கு அடிமைகளல்லவா? எங்களைக் காத்து ரக்ஷிக்க வேண்டிய நீயே கைவிட்டுவிட்டால் நாங்கள் யாரிடத்தில் முறையிட்டுக்கொள்வது? இவ்விராஜ்யம் இன்றோடே பாழாய்விட்டதே. தொன்றுதொட்டு புகழுடன் பரிபாலனஞ் செய்யப்பட்டு வந்த இவ்விராஜ்யத்திற்கு இன்று முடிவு ஏற்பட்டதே. இவ்வளவு காலமாய் எங்களுக்கொரு ஆண் சந்ததி யேற்படாமற் போனது நான் செய்த தீவினைப்பயன். ஆண் சந்ததி யேற்படாவிட்டாலும் பிறந்த பெண்ணுவது உயிருடனிருக்கலாகாதா? இப்பொழு திருந்தால் இவ்விராஜ்யத்தை யாளுவதற் கேற்ற வயதாயிருக்குமே. அந்தப் பாக்கியமு மேற்படவில்லை. எல்லாம் போனபோதிலும் என்னுடைய நாதனுவது இன்னுஞ் சில காலத்திற்கு உயிருடனிருந்து இவ்விராஜ்ய பாரத்தை வகித்திருப்பார்களென் றெண்ணி யிருந்தேன். அதுவுமில்லாமல் என்வாயில் மண் விழுந்தது. இனிமேல் எனக்கேன் இவ்விராஜ்யத்தைப் பற்றிய கவலை? என் பிராணநாதரே போய்விட்டாரே. இவ்விராஜ்யமெப்படிப் போனல் எனக்கென்ன? ஆனல் நான்மாத்திரம் தங்களைவிட்டு பிரிந்திருப்பேனென்று எண்ணவேண்டாம். உங்களுக்குப் பிறகு எனக்கிவ்வுலகத்திலென்ன வேலை? நானும் என்னுயிரை மாய்த்துக் கொண்டு உங்கள் பின்னல் வந்துவிடுகிறேன். (யாரோ கதவைத் தட்டுகிற சத்தங் கேட்டு) யாரங்கே?

**சேவகன்**:—அடிமை, அம்மணி. அப் பெண்ணைக் கொலைசெய்வதற்கு எல்லாஞ் சித்தமாய் விட்டது. மந்திரி உத்தரவை எதிர்பார்த்துக்கொண் டிருக்கிருர்கள்.

சக்ரவர்த்தினி:—அப்படியே செய்யும்படி சொல். (சேவகன் போகிறான்.) எல்லாம் இந் நீலியா லேற்பட்டதல்லவா? என்னுடைய நாதனையுங் கொன்று என்னையு மநாதியாக்கி இவ்விராஜ்யத்தையும் பாழாக்கின அக்கள்ளி இருப்பதிலு மிறப்பதே நலம். நானு மென்னுடைய நாதரை விட்டுப் பிரிந்திருப்பதிலும் என்னுயிரை மாய்த்துக் கொள்வதே உத்தமம். (சக்ரவர்த்தியின் சமீபத்திலிருந்து கத்திரை யெடுத்துக்கொண்டு) உங்களுக்குப் பின்னால் நானும் வந்துவிடுகிறேன். என்னையுமழைத்துச் செல்லுங்கள். (கத்தியை தன் கழுத்தில் வைத்துக்கொண்டு சக்ரவர்த்தியின் முகத்தில்முத்தமிட்டுக்கொண்டிருக்கையில்) ஆகா, இதென்ன இது! சுவாசம் வருகிறதுபோல் தோன்றுகிறதே! கைகால்கள் அசைகின்றன! (பயந்து பின் வாங்கி நிற்கிறாள். சக்ரவர்த்தி புரண்டெழுந்து உட்காருகின்றார்.)

சக்ரவர்த்தி:—இதென்ன இது. இங்கு வேறொருவருமில்லாமல் நீ மாத்திரம் இவ்வளவு அலங்கோலத்துடன் கத்தியுங் கையுமாய் தனியே நின்று அழுதுகொண்டிருக்கின்றனை. மந்திரிகளெங்கே? மீனும்பிகையே யுருவெடுத்து வந்ததுபோல் வந்தென்னைக் குணப்படுத்திய அப்பெண்மணி யெங்கே?

சக்ரவர்த்தினி:—(சக்ரவர்த்தியைக் கட்டிக்கொண்டு) இப்பொழுது தான் நான் மீனும்பிகையைக் கையெடுத்தது பலன் பெற்றது.

சக்ரவர்த்தி:—என்ன சொல்லுகிறாய்? ஒன்றுந்தெரியவில்லையே. நான் நித்திரை செய்யும்போது எல்லோருஞ் சமீபத்தி லிருந்தார்கள். இப்பொழுது நீ தனியே யிருந்து அழுதுகொண்டிருப்பதற்குக் காரணமென்ன?

சக்ரவர்த்தினி:—தாங்கள் நித்திரை செய்யும்போது தங்கள் சமீபத்திலிருந்த அப்பெண்ணழுகிற சத்தத்தைக் கேட்டு சேவகன் வந்து தங்களைப் பார்த்துவிட்டு எங்களிடத்தில் வந்து சொன்னான். நான், மந்திரி, மற்றுமெல்லோரும் வந்து பார்த்தோம். சுவாசமொன்று மிருப்பதாகத் தோன்றவில்லை.

சக்ரவர்த்தி:—சரிதான். நானிறந்து விட்டேனென்று நினைத்து இவ்வித மழுதுகொண்டிருந்தாயோ? நான் அம்மருந்தின் குண

த்தினுல் சற்றுஅயர்ந்து நித்திரை செய்தேன்போல் தோன்றுகிறது. உங்களுக்குத் தெரியாவிட்டாலும் வயித்தியர்களை யழைத்துப்பார்க்கச் சொல்லக் கூடாதா?

சக்ரவர்த்தினி:—மந்திரி யப்படியுஞ் செய்தார். வயித்தியர்கள் வந்து பார்த்து விட்டு கெடுதி யேற்பட்டுவிட்டதாகவே சொன்ஞர்கள். அதனுல் தான் நாங்களும் நிச்சயமாய் எண்ணிஞேம்.

சக்ரவர்த்தி:—நீர் மூடர்கள்! சரி. அப்பெண்மணி யெங்கே?

சக்ரவர்த்தினி:—தங்களுக் கவளால் கெடுதியேற்பட்டதென்று நினைத்து அவளைக்கொன்றுவிடும்படி உத்தரவு செய்துவிட்டேனே. ஐயையோ!

சக்ரவர்த்தி:—(திடுக்கிட்டெழுந்து) அடி பாவி. என்னகாரியஞ் செய்தனை? கொன்றுவிட்டார்களா?

சக்ரவர்த்தினி:—தாங்கள் விழிப்பதற்கு கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் சேவகன் வந்து உத்தரவு கேட்டான். உத்தரவு கொடுத்தேன்.

சக்ரவர்த்தி:—ஆனு லின்னு மொருவேளை கொன்றிருக்கமாட்டார்கள். இதோ ஓடிப் போகிறேன். அவளைக் கொன்றிருந்தால் என்னுயிரை நீ காணப் போகிறதில்லை. (ஓடுகிருர்.)

சக்ரவர்த்தினி:—இதென்ன! பழி வந்து. எற்பட்டதே நானென்ன செய்யப் போகின்றேன். தெய்வமே! குறையுங் காத்தருளல் வேண்டும். (பின்னுல் போகிருள்.)

---

## களம் 6.

---

இடம்: அரண்மனைவாசல்.

காலம்: காலை.

(கமலனி நிற்கிருள்: அவளைச் சுற்றி மந்திரிகள், கொலைபாளி, மற்று மெல்லோரும் நிற்கிருர்கள்.)

மந்திரி:—ஏ பெண்ணே! அதிக திரவியங்க ளடையலாமென்ற பேராசையினுலல்லவா நீ இவ்வளவு துணிவுடனிங்கு வந்து இக்காரியஞ் செய்தனை. உன் பேராசையினுல் நீ யின்னுமநேக உயிர்களை

இப்படிக் கொன்று விடுவாயாகையால் நீயிறப்பதே உத்தமம். உனக்கு உறவினர்கள் யாராவது எங்கேயாவது இருக்கிறார்களா? அவர்களுக் கேதாவது சங்கதி சொல்லி யனுப்பவேண்டுமென்ற எண்ணமிருக்கிறதா? உன்னுடன் இன்னுமொரு பெண் வந்ததாகச் சொன்னார்களே? அவளெங்கே?

கோமதி:—(அழுதுகொண்டு வருகிறாள்.) ஐயோ! நானிந்த அநியாயத்தைப் பார்க்கவா இவ்வளவு தூரம் வந்தேன். கமலினி! உன் தாயிறந்த நாள் முதல் உன்னை யெடுத்து வளர்த்து வந்த எனக்கு இந்தக்காட்சிதானா கொடுத்துவைத்தது? (மந்திரியை நோக்கி) ஐயா! அவளொரு சிறு பெண். தெரியாமலேதோ செய்துவிட்டாள். சக்ரவர்த்திக்குக் கெடுதி செய்ய வேணுமென்ற எண்ணத்துடன் அவள் வரவில்லையே. நல்ல எண்ணத்துடன் வந்தும் அவளுடைய துர்ப்பாக்கியத்தினா லிப்படி நேரிட்டுவிட்டது. இனிமேலவளைக் கொலை செய்வதால் உங்களுக்கு என்ன பலன்? சக்ரவர்த்தி மீளப் போகிறார்களா? ஆகையா லவளை மன்னித்து உயிர்கொடுக்கக் கூடாதா?

மந்திரி:—சக்ரவர்த்தினியின் ஆக்கினைப்படியல்லவா நடக்கவேண்டும். மேலும் எங்கள் சக்ரவர்த்தியைக் கொன்றவளை நாங்கள் சும்மாவிட்டுவிட்டால் அதனால் எங்களுக்கு ராஜத்துரோகம் ஏற்படுமல்லவா?

கோமதி:—அவள் கொல்லவில்லையே.

மந்திரி:—அவள் கொல்லவில்லையா! மற்று என்செய்தாள். அஃதெல்லாஞ் சொல்லிப் பிரயோசனமில்லை. ஏ பெண்ணே! உனக்கு ஏதாவது சொல்லிக் கொள்ள வேண்டுமென்றால் அவளிடஞ் சொல்லிக் கொள். உன்னிஷ்ட தெய்வத்தையும் பிரார்த்தித்துக்கொள். சக்ரவர்த்தினியினிடம் உத்தரவு வாங்கப் போயிருக்கிற சேவகன் வந்தவுடன் உன்னுயிர் வாங்கப்படும். சேவகனும் அதோவருகிறான்.

சேவகன்:—(நமஸ்கரித்து) சிரசாக்கினை செய்யும்படி மகாராணியவர்கள் உத்தரவளித்தார்கள்.

மந்திரி:—சரி, கொலையாளி! தயார்செய். ஏ பெண்ணே! உனக் கிவ்வுலகில் இன்னுங் கொஞ்ச நிமிஷங்களே யுள்ளன. உன் காரியங்களை அதற்குள் முடித்துக்கொள்.

கமலினி:—(அழுது கொண்டு கோமதியை யழைத்து) அம்மணி, என் விதியின் கொடுமையினு லிவ்வளவு துன்ப மனுபவிக்கும்படி நேரிட்டது. உன்னையு மிங்கு அழைத்து வந்து இவ்வளவு துயரப்படுத்தினதற்காக என்னை மன்னிக்க வேண்டும். நீ எனக்கு சிறுபிராயமுதல் செய்திருக்கிற நன்றிக்கு பிரதியுபகாரஞ் செய்வதற்கில்லையேயென்றும் என் மனம் வருந்துகின்றது. அதற்காகவும் மன்னிக்கவேண்டும். க்ஷேமமாய் ஊர்போய்ச் சேர்ந்து நமது வீரகேசரி மன்னனிடத்திலும் அவர் தாயிடத்திலும் பேராசையா லுயிரை யிழந்த இப்பாவியின் முடிவைப் பற்றிச் சொல்லு. அவர்கள் எனக்குச் செய்திருக்கிற நன்றிக்கு நான் எத்தனை ஜென்மங்களெடுத்து அவர்களுக்கு உழைத்தபோதிலும் அது ஈடாகாது. அவர்களிடத்தில் எனக் கேற்பட்டிருந்த அளவிறந்த அன்பைப் பற்றியுஞ் சொல். வீரகேசரி மன்னனைத் தனியாகச் சந்தித்து அவரிடத்திற் கொண்ட காதலாலே நான் இக்கதி யடைந்தேனென்று சொல்லு. அவரை மணஞ் செய்யக் கருதியே நான் இவ்வளவு துன்பத்திற் காளானேன். உனக்குநமஸ்காரம். அவர்களுக்குமென் நமஸ்காரத்தைச் சொல்லு. இனி நீ போகலாம். நீ சமீபத்திலிருந்தால் என் மனம் அதிக துயரமடைகின்றதாதலால் நீ போய்விடு. (கோமதியும் கமலினியைக் கட்டியணைத்துக்கொண்டு) நானு மிந்தத் துயரத்தை அனுபவிக்கவா இங்கு வந்தேன். நான் என் செய்யப் போகின்றேன்! தெய்வமே! உனக்குக் கண்ணில்லையா?

மந்திரி:—சரிபோ, நேரமாகின்றது. (கோமதி யழுதுகொண்டு போகின்ருள்.)

கமலினி:—ஏ செந்திலாதிபா! நான் உன்னைப் பக்தி செய்து வருகின்ற அடிமையென்றும் உன் கருணைக்குப் பாத்திரப்பட்டவளென்றுங் கருவங்கொண்டு இக்காரியஞ் செய்யத் துணிந்தேன். நானவ்வளவு பாத்திரப்பட்டவளல்ல வென்பது இப்பொழுதுதான் தெரிந்தது. இருந்தபோதிலும் நான் கேட்கும் வரங்கள் இரண்டேயுள்ளன. அடுத்த பிறப்பிலாவது என் மன்னன் வீரகேசரியை மணஞ்செ வேண்டுமென்பதொன்று. எத்தனை ஜென்மங்களெடுத்த

போதினு முன் திருவடியிலுள்ள பற்று நீங்காம லிருக்க வேண்டுவது மற்றொன்று. இவ்விரண்டு வரங்களையும் கொடுத்தருளல்வேண்டும். (நமஸ்கரித்து நிற்கின்றாள்.)

"மைவருங் கண்டத்தர் மைந்தகந் தாவென்று வாழ்த்து மிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறி யேன் கற்ற கல்வியும் போய்ப்
பைவருங் கேளும் பதியும் கதறப் பழகி நிற்கும்
ஐவருங் கை விட்டு மெய்விடும் போதுன் னடைக்கலமே".

(என்று சொல்லிக் கொண்டு குனிந்து நிற்கிறாள்.)

மந்திரி:—சரி நடக்கட்டும்.)

கொலையாளி:—(கத்தியை யோங்கிக்கொண்டு) சரியாய் குனிந்து நில்.

சக்ரவர்த்தி:—(பின்னு லோடிவந்து கொலையாளியின் கையைப் பிடித்துக்கொண்டு) நிறுத்து. மூர்க்கா!

---

(இன்னும் வரும்.)

டி. யம். சங்கரலிங்கம்பிள்ளை.

261

# அஷ்டமீப் பிரதக்ஷணமான்மியக் கும்மி.

காப்பு.

முன்னொரு நாட்பசு மேய்த்த விடையனை
முத்தியிற் சேர்க்கத் திருவுளத்தி
லுன்னிநஞ் சொக்கர்செய் நல்வினை யாட
லுரைத்திட வைங்கரன் றுணையே. (1)

பச்சை மயின்மிசை யிச்சையா யேறுங்கரு
பாகர னாறு முகன்கழல்க
ளுச்சியிற் சூடியே போற்றுவ னிக்கும்மி
யோங்கியெந் நாளுந் தழைத்திடவே. (2)

அண்டங்க ளெல்லாம் பெறுதுபெற் றுண்டிடு
மம்மை தடாதகை யைமணந்து
யெண்டிசை யும்புரந் தின்னருள் செய்மது
ரேசன் றிருவடி யேத்திடுவேன். (3)

பாண்டியன் றேவியாங் காஞ்சன மாலைமுன்
பண்ணிய நற்றவத் தாலுதித்துக்
காண்டகு நாடர சாண்டிடு மங்கயற்
கண்ணியிக் கும்மிக் கொருதுணையே. (4)

நான்முக னாவி லுறைகலை வாணியி
னாண்மலர்ப் பாதங்க ளிற்பணிந்து
நூன்முறை யாக நவிலலுற் றேன்பெரு
நூல்கள் கல்லாத சிறியேனே. (5)

சற்குரு பாதந் தொழுதேத் திச்சைவ
சமய குரவர் பதம் போற்றி
யற்புத நற்செயல் செய்முனி வோரெனு
மந் னர் பாதம் பணிவேனே. (6)



ப்ப ௬

### அவையடக்கம்.

என்றன்புன் சொல்லைக் கருதார் களிதி
லீசன் பெருங்கதை சேர்தலினாற்
றுன்று கவிப்புல வோரிக ழாசென்று
சொற்றனன் சிந்தை களிப்புறவே. (7)

### நூல்.

முத்தமிழ் வாண ரகமகிழ் வாகமுன்
முச்சங்கங் கொண்டிடு நற்பதியாம்
சித்திமுத் திலகுஞ் சத்திய மீசனுஞ்
சீர்க்கும ரேசனு மாட்சிசெய்ய. (8)

உத்தம மான வுறைவிட மாந்தல
முன்னருந் தீர்த்தநன் மூர்த்தியென
முத்திற னும்மொருங் கேயமர்ந் திட்டது
மூதுணர் வோர்தவஞ் செய்யுமிடம். (9)

இத்தலத் தில்வசிப் போர்க ளறம்பொரு
ளின்பம்வீ டெய்துவர் நிச்சயமென்
றத்த னருள்பெறு முத்த ருரைத்தன
ராகம வேத புராணவழி. (10)

செப்பரு மத்திரு வாலவாய்ப் பக்கத்திற்
றிருமங் கலமென்னுங் கிராமத்திலே
யொப்பிலா வேதவே தாங்க முதலாக
வுணர்ந்த பிராமணன் றானொருவன். (11)

கிரியைகள் செய்விப்பன் வேதாந்தார்த் தங்களைக்
கீர்த்தி விரும்பிச் சகலருக்கும்
உரிமையாய்ப் போதிப்பன் பல்வழி யாற்பொரு
ளுதியங் கொள்ளுவன் நீசரெனும். (12)

கொடிய ரிடத்திலுந் தானங்கொள் வான்மிகு
கொடியவன் றீமதுப் பானஞ்செய்வான்
மிடியறு ஸ்மார்த்தன்போல் வேடந் தரிப்பவன்
வேண்டிமற் றோரைத்துன் பஞ்செய்குவான். (13)

பூதிருத் ராக்கங்க ளையிகழ்ந் தூர்த்துவ
புண்டரங் கோபிச்சந் தாலணிவான்
நீதிம றந்துபி றர்மனை யாரொடு
நித்தமுஞ் சேர்வன் றுட் டத்தனமாய். (14)

சித்தாந் தங்களை நிந்திப்பன் யாவருந்
தீக்கொடும் பாவியென் றேயிகழ்வார்
சித்த மகிழ்ந்திந்தப் பாவி யிருந்தனன்
சீர்பெறு நற்பயிர்க் கோர்களையாய். (15)

மற்றொரு வேதியன் கத்தரித் தோட்டங்கள்
வைத்ததன் காய்களை யந்தணர்க்கே
யற்புத மாகக் கொடுத்துவந் தானிந்த
வற்பனுக் கியா தகற்றிவிட்டான். (16)

வித்தக னாகிய கத்தரித் தோட்டத்து
வேதிய னற்றிருக் கோயிலிலே
மத்த மணிசிவ னைத்தரி சிக்கவே
வந்தனன் றீயவெம் பாவிகண்டான். (17)

காரண மின்றிப் பலவிதம் நிந்தித்துக்
காலா லொருதை போட்டானே
பாரிலுள் ளோர்கள் பதைக்கக் கொடுஞ்செயல்
பண்ணிடுந் தீய கொடும்பாவி. (18)

அந்த வுதையால் வருந்தும் பிராமண
னம்புவி யாண்டிடும் பாண்டியன்பால்
வந்தறி வித்திட மன்னன்மா பாவியை
மந்திரி மாரால் வரவழைத்தான். (19)

வந்திடும் பாவியைப் பாண்டியன் பார்த்திந்த
மறையவர் தம்மைநிந் தித்தலுடன்
னொந்திடக் காலா லுதைத்தனை காரண
னொடியிற் புகலுவா யென்றனன். (20)

வன்பாவி கூறுவான் கத்தரிக் காயது
மாமிசத் திற்கொப்பா மாகையினல்
இன்பமா'யுண்டவன் சண்டாள ஞமிவ
னின்று திருக்கோயி லுண் ணுமைந்தான். (21)

திருக்கோயி லெங்குநற் சுத்திக ளானவை
செய்திடத் தக்கதென் றெண்ணியென்றன்
பருத்தவோர் காலா லு தைத்தன னென்றந்தப்
பாவி பகர்ந்திடக் கேட்டானே. (22)

மதிகெட்ட பாவியிவ் வாறுரைக்க மன்னன்
மந்திரி மார்கள் சபையோர்கள்
புதிதென வாச்சர்யங் கொண்டன ரக்கணம்
பொதியைக் குறுமுனி வந்தனரே. (23)

பழுதிலா வம்முனி பாதங்க ளிற்பூசை
பண்ணியெல் லோரும் பணிந்தேத்தி
வழுதுணங் காய்வர லாறுசொல் வீரென
மாதவன் கூறத் தொடங்கினனே. (24)

வார்த்தாக னெம்பெரு மானைப் பூசிக்கையில்
வந்தன ரந்நாட் கண்ணபிரான்
பார்த்து மரம்போ லிருந்தனன் பாதத்திற்
பத்தியாய்ப் பூசியாக் குற்றத்தினல். (25)

மால்சினங் கொண்டுவார்த் தாகனே நீசெய்த
வன்செய்கை யால்யுக முள்ளளவும்
சால விரைவிற் செடியா வாயதன்
றண்ணிய காயுண்ணற் காகாது. (26)

போகக் கடவ தெனச்சபித் தேகினன்
புந்தி வருந்திவார்த் தாகனுமே
யேக னெனுஞ்சிவ னைப்புகழ்ந் தர்ச்சித்
திறைவனே சாபந் தவிர்ப்பாயென்றான். (27)

ஈசன்ம கிழ்ந்தன்ப னேநம் மருட்குறிக்
இன்பமாம் பூசை யியற்றியதால்
கேசவன் சாபத்துக் கஞ்சா தேயுன்போர்க்
கேடிலாச் சாகக் கறிநலமே. (28)

விண்டுவுக் கும்மவன் றெண்டருக் குமுண்ணா
வேண்டு முரிமை தொலைந்தொழிக
அண்டத்தி லுள்ளநல் வேதிய ராதி
யனைவர்க்கு மேயுரித் தாகுமிது. (29)

பூசை யுனது கறியின்றிச் செய்தேவர்
போற்றினுஞ் சம்மதங் கொள்ளேம்நாம்
ஆசை யுடனேநம் பத்தர்க ளுன்கறி
யானதை யுண்டா லதில்மகிழ்வேம். (30)

உன்கறி யுண்ணிற்ப ரான்னம் புசித்திடு
மோர்குற்ற நீங்கிடு மின்னுஞ்சொல்வேம்
சின்முள் ளூ .னே யிருப்பத னுற்பிதிர்
சிரார்த்தங் களுக்கு முரித்தாகும். (31)

என்று பலவா யிசைத்துச்சர் வேச்வரர்
இணையில் வரங்களுந் தந்தகன்றார்
அன்றிவ் வாறுக நடந்ததாற் கத்தரி
யனைவருங் கொள்ளற் குரிய தென்றார். (32)

அகத்திய மாமுனி யிவ்வணஞ் சொன்ன
தறிந்துசீர்ப் பாண்டியன் பாவிதனை
உகத்தின் முடிவு வரைசிறைச் சாலையி
லுய்த்திட உத்தர வைக்கொடுத்தான். (33)

அரசன தாணைப் படிசில நாளவ
னருவிலங் கிற்கிடந் தேயழுந்தி
மரணந் திருவால வாயிலுற் றனஃதால்
வந்துதித் தானேசிந் தாமணியில். (34)

தன்ருபட் டவோ ரிடையனுக் கான
தனயஞ கப்பிறந் திட்டானே
தள்ளரு மூழ்வினை யால்மறை யோர்களைச்
சாதுக்கள் தங்களை நிந்தைசெய்வான். (35)

கள்ளுண்டல் செய்வன் பிறர்க்குரி யார்தமைக்
காதல்கொண் டேயென்றுங் கூடிடுவான்
கள்ளருக் கொற்றுமை யாயிருப் பான்புலாற்
கடைவைத்து விற்றலுஞ் செய்திடுவான். (36)

சற்சம யங்களை நிந்தித்து நாஸ்திகந்
தன்னை யடைந்தான் கொடும்பாவி
துற்சன ஞமவ னுக்குமோ க்ஷந்தரத்
சுந்தரே சர்திரு வுள்ளங் கொண்டார். (37)

பக்கத்தி லுள்ளமீ னுக்ஷியாந் தேவியைப்
பார்த்துரைப் பாருமை யேகேளு
அக்கொடும் பாவி யிடையனுக் கின்றே
யளித்திட வேண்டுகன் முத்தியடி. (38)

பாவியே யாயினு நம்மரு ளாற்றினம்
பரிவுடன் வேளாண் மையினிமித்தம்
தாவிப் பசுக்களை மேய்த்துக்காக் கின்றனன்
சம்வத்ச ரத்துக்கோர் க்ரோசதூரம். (39)

பூமியைச் சேர்க்கின்ரு னுயினு மந்தணர்
பூமியை வேண்டாத நற்குணத்தான்
தாமச மின்றித் தரிசான காடுகள்
தானே திருத்துங் கருத்துடையான். (40)

இத்தகை யானுக்கு முத்தி கொடுத்திடி
லெய்து நமக்குப் பெரும்புகழே
இத்தரு ணத்தினீ யேபசு வாயந்த
விடையுன்வ யற்பயிர் மேய்வதுபோல். (41)

காட்டிவிட் டாலவன் கைத்தடி கொண்டுனைக்
கடுஞ்சினத் தாற்புடைக் கவருவான்
ஓட்டம் பிடித்தா லவனுன்றன் வால்பிடித்
தோடி வருகுவான் வேகமுடன். (42)

கோட்டை வீதிமுதல் ஐந்துநல் வீதியுங்
குணமா கவலஞ் சுற்றிவந்து
நாட்டிற்குச் சேமந் தருமாடி வீதியில்
நம்மிட சந்நிதி வீற்றிருக்கும். (43)

இடபத்தின் பின்றள்ளி முன்னுரு வத்துடன்
என்றனி டம்வந்து சேர்கவென்றார்
திடமுள்ள வம்மையு மவ்வணஞ் செய்தனள்
தீயவன் றால சரீரம்விட்டான். (44)

சூக்கும தேகியாய்த் தேவ விமானத்திற்
றேற்றினன் றேவ ருபசரிக்க
வாக்கு மனத்திற்கெட் டாச்சுந்த ரேசரு
மாதுடனே யிட பாரூடராய். (45)

தெரிசனந் தந்துகோ பாலநீ செய்திட்ட
தீய பவத்தொகை சென்றதடா
பரிசுத்த வாத்துமா வாகிக் கயிலையிற்
பன்னாளு நீவசிப் பாயெனவே. (46)

திருவாய் மலர்ந்துன் பிறவியைப் போக்கிய
தீதறு மார்கழிக் கிர்ஷ்ணபக்ஷம்
மருவிய வட்டமி தன்னி லெவருமே
வாசப்பொற் றாமரை நீராடி. (47)

நித்திய கர்மாநுட் டானங்கள் செய்துநன்
னேயம தாயரு ளேதையத்திற்
பத்தியாய்க் கிழத் திசைமுத லாய்வேத
பாரா யணமுத லானவையால். (48)

எம்மைத் தியானித்துத் தைமாசி யாவணி
யெழிற்சித்திரை ஆடிநல் வீதிகளை

வெம்மைதீர்க் குங்கோயிற் பிரகா ரங்களை
வேத விதிப்படி சூழ்ந்துவந்து. (49)

கோயிலுட் சென்று விநாயக மூர்த்தியைக்
குமரனை யங்கயற் கண்ணிதனை
நேயமு டன்றொழு தேத்தி நமதுசந்
நிதியிற் சென்று நமஸ்கரித்து. (50)

மற்றத்தெய் வங்களை நூன்முறை யின்வழு
வாது தொழுது பணிந்தேத்திக்
குற்றங்க ணீக்கும்பஞ் சாக்கர மாதியாய்க்
கூறிடு மந்திரங் கள்ஜெபித்து. (51)

ஆயிரத் தெட்டுரு வாய்ச்செபித் துத்தங்கட்
கான கிருகங்க ளிற்சேர்ந்து
நேயமுள் ளசிவ பத்தர்க் கறுசுவை
நீடிய பாகங் களினுடனே. (52)

முன்னருத் தித்தாங்கள் பின்னுண்டா சீர்வாத
முறையிற்பெற் றுண்ணக் கடவரென்றார்
அன்னையோர் பாகன்சொல் லைச்செவி யிற்கொண்
டடைந்தனன் முத்தி யிடையனுமே. (53)

வருடந் தொறும்வரு மிந்தத்தி னத்தெங்கு
வதிபவ ராயினும் பத்திசெய்தாற்
புருடார்த்த நான்கும்பொ ருந்துவ ராலவாய்ப்
புண்ணிய க்ஷேத்திரத் திற்புரிந்தால். (54)

வந்திடு நன்மை யளப்பரி தாமென்று
மாதேவ னம்மைக்குச் செப்பலுற்றார்
சந்தமார் கந்தபு ராணங் குருகீதை
சாற்றிய விக்கதை தான்வாழ்க. (55)

அந்தணர் வாழி சுரர்வாழி பசு
வாபங்கள் வாழி மழைவாழி
சந்தத மும்மர சன்வாழி சொக்கர்
தாளிணை வாழி யுமைவாழி. (56)

அ. முத்துசாமி பிள்ளை,

# சமாசாரக் கொத்து.

---

ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணியய்யரவர்கள் தேக வியோகம்:—மதுரையில் பிரபல வக்கீல்களி லொருவரும், தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம், ஆந்திரம், சங்கீதம், சோதிடம், வயித்தியம் முதலிய பலவகைக் கல்விகளில் பயிற்சி யுடையாரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்கும், மதுரைத் தர்ப்பசாஸ்திர சபைக்கும், அக்கிராசனாதிபதியும், பரோபகாரியும்ஆகிய ப்ரும்மஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணியய்யரவர்கள் நிகழும் 1913௵ நவம்பர்௴ 24௳ மாலை 4½-மணிக்கு மதுரையில் தமது கிருகத்தில் தேகவியோக மானார்களெனத் தெரிந்து மிகவும் விசனிக்கிறோம். இவர் கல்வித்திறமைக்கேற்ப நல்லொழுக்க முற்றவர். தினந்தோறும் அதிகாலையில் நித்திய கர்மானுஷ்டானங்களைமுடித்து ஸ்ரீ மீனாக்ஷி தரிசனைசெய்து வந்துதான் எந்த வேலையையும் தொடங்குபவர். எத்தனையோ சபைகளில் அக்கிராசனம் வகித்தும் உபந்யாசங்கள் செய்தும் வந்தவர். தற்காலப் போக்கைத் தழுவித் தமிழில் வசனநூல்களாகிய நாவல்கள் பல எழுதியவர். நமது பானுவுக்குப் பல௵ விஷயதானஞ் செய்துவந்தவர். எந்த வித்துவான்கள் வந்தாலும் அவர்களை வரவேற்று உபசரித்து இயன்றவரை பொருளுதவி செய்துவந்தவர். பொதுவாக சங்கீத சாஹித்ய வித்துவான்களிடம் மிகவும் அபிமானமுள்ளவர். இத்தகைய புனிதசீலரின்பிரிவு இம் மதுரைமாநகரத்துக்கு ஒரு பெரிய நஷ்டமென்றே சொல்லலாம்.

* * * *

ஸ்ரீ சுப, ராம. நாச்சியப்ப செட்டியார் தேக வியோகம்:—இவர் திருப்புத்தூரின் கீழ்புறம் 5-மயில் தூரத்திலுள்ள நாச்சியார்புரம் என்னும் ஊரில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் குலத்தில் சுப. ராமன் செட்டியாருக்கு 50 வயசுக்குமேல் புத்திரராகப் பிறந்தவர். இவர் பிறக்கு முன்னமே இவர் தந்தை சுப. ராம. ராமசாமி செட்டியார் என்பவரை ஸ்வீகாரப் புத்திரராகக் கொண்டனர். ஷை ராமசாமி செட்டியார் ஸ்வீகாரம் வந்த விசேடத்தால் அவர்க்குத் துணைவராக நமது நாச்சியப்ப செட்டியாரும் ஜனனமானார். இந்த நாச்சியப்ப செட்டியார் ஆண்டிளைஞராயினும் அறிவின் முதியரா

கித் தமிழபிமானமும் சைவாபிமானமும் மிகக்கொண்டு தம் ஊரில் செந்தமிழ் வாசகசாலை என ஒரு ஸபை ஸ்தாபித்துப் புத்தகசாலை ஏற்படுத்திப் பற்பல வித்துவான்களைத் தருவித்து உபந்யாசங்கள் நடைபெறச் செய்துவந்தார். செந்தமிழ் வாசகசாலைக்குத் தாமே அக்கிராசனாதிபதியா யிருந்து ஒரு வருஷகாலம் நன்றாக நடத்தினர். இடையே இருமல் வியாதியால் மிகவும் வருந்துவாராயினர். அங்ஙனம் வருந்துங்காலத்தில் தம் முடற்பிணியையுங் கருதாது வாசகசாலையின் முதலாண்டு பூர்த்திக் கொண்டாட்டத்தை மிக விமரிசையாக நடத்தினர். அநேக நற்குண நற்செயல்க ளுள்ளவர். இவர் வியாதியைப் போக்க மருந்து சாப்பிடவேண்டி மதுரைக்கு வந்திருந்தனர். வந்த இடத்தில் அந்தோ தம் அருமைத் தந்தையும், கற்புடை மனைவியும், அன்புத் துணைவரும், உரிமை நண்பரும் பரிதவித்திரங்க எல்லாரையும் விட்டு 6—11—13ல் சிவபதம் எய்தினர். இவர் பிரிவைப் பற்றி யாம் மிகவும் விசனிக்கின்றோம். அதிபால்யத்திலேயே சகல நற்குணங்களும் பொருந்தி அரிய செயல்களைச் செய்துவந்த இவர்பிரிவு யாரைத்தான் வருத்தப்படுத்தாது? இவர் பிரிவைப்பற்றி வருத்தமுற்ற தஞ்சைத் தமிழ்முனிஷி கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் பாடிய சரமகவிகள் மிகவும் உருக்கஞ் செய்வன. அக் கவிகளில் கடைசிக்கவி வருமாறு.

சாற்றும்பிர மாதீச வாண்டிலைப் பசிமதியிற் றகுமூ வேழில்
ஏற்றபுதன்பூர்வபக்கம்சப்தமியும்ஓணமும்வந்திசைந்தநாளில்
ஆற்றலுறு நாச்சியார் புரநாச்சி யப்பனுய ரடிகள் பாதம்
போற்றியரன்கழல்கூடிமெய்ஞ்ஞானமுத்தியின்பம்பொருந்தினுனல்

என்பதே. இந்த நாச்சியப்ப செட்டியாரின் தமையனாரும் தந்தையும் இவரிடத்தே மிக அன்புற்றவர்க ளாதலின் இவருக்கு மிகப் பிரியமான செந்தமிழ் வாசகசாலையைத் தளரவிடாது பரிபாலிப்பார்களென்றே நம்புகிறோம். இறைவ னருள்க.

* * * *

குமரேசகிருபாசங்கம்:—இது மதுரை மீனாக்ஷிகோவில் தெற்கு ஆடிவீதியில் ஸ்ரீ, பாண்டித்துரைத் தேவரவர்கள் ஏற்படுத்திய பஜனைமடத்தில் நடைபெறுகின்றது. இதன் தலைவர் மதுரை

ஸ்ரீ சுந்தரபாண்டிய ஓதுவார்மூர்த்திகளே. இவர்கள் பால்யமும் விடாமுயற்சியும் ஊக்கமும் கொண்டுள்ளவர்கள். இச்சங்கம் இவர்களது நன்முயற்சியாலே மேய் நடைபெறுகின்றது. கடந்தஐப்பசிமீ ஸ்ரீ கந்தர்சஷ்டி யுற்சவகாலமாகிய 6-நாளும் இச் சங்கத்தில் சிறந்த உபந்யாசங்கள் நடந்தன. குமரக்கடவுள் கிருபையால் இச் சங்கம் நீடு வாழ்க.

* * * *

மதுரைத் தமிழ்ச்சங்கமும் சேதுபதி மஹாராஜா அவர்களும்:— மதுரைத் தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தித் தலைமைவகித்துப் புகழ்பூண்ட ஸ்ரீமாந் பாண்டித்துரைத் தேவரவர்கள் காலஞ்சென்றபின் மதுரை ப்ரும்மஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணியய்யரவர்கள் அக்கிராசனாதிபதியாக இருந்து நடத்திவந்து அவர்களும் காலஞ்சென்றார்கள். பின்னர் இச் சங்கத்துக்கு அக்கிராசனாதிபதியாக ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியதாயிற்று. எல்லாவிதத்தாலும் தமிழுக்கும் சைவத்துக்கும் தமிழ்ச்சங்கத்துக்கும் முழு வுரிமைபூண்டுள்ள சேதுசம்ஸ்தான கர்த்தரவர்களாகிய ஸ்ரீமத் முத்துராமலிங்க சேதுபதி மகாராஜா அவர்களை அக்கிராசனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப் பெற்றார்கள். சங்கத்தார்கள் இங்ஙனம் ஏற்படுத்தியதுபற்றித் தமிழபிமானிகள் யாவரும் பெரிதும் மகிழ்கின்றார்கள்.

லட்சத்து அறுபதாயிரம் ரூபா கல்வியபிவிருத்திக்கு நன்கொடை:— காலஞ்சென்ற ராவ் சாகிப் R. B. கராண்டிகார் என்னும் பிரபல கனவான் தர்ம எழுதிவைத்த உயிலில் இந்தியாவில் இந்தியர்களின் கல்வி அபிவிருத்திக்காக ஒரு லட்சத்து அறுபதாயிரம் ரூபா எழுதிவைத்திருக்கிறார் என்று அறிந்து சந்தோஷிக்கிறோம். இதுவன்றோ சிறந்த தருமம்! இதுவன்றோ வள்ளற்றன்மை!! டார்வார் டிரையினிங் காலேஜ் பிரின்ஸிபால் மிஸ்டர். V. P. லோஷியின் ஆலோசனையில் இத்தொகை விநியோகிக்கப் படவேண்டுமென்றும் அந்த உயிலில் அவர் எழுதியிருக்கின்றார்.

ஹைகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் S. ஸ்ரீனிவாச ஐயங்கார்:— தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் கஷ்ட நிவிர்த்தி நிதிக்கு

இவர் ஆயிரம் ரூபா நன்கொடை யளிக்க மனமுவந்து இசைந்தார். இப்போது 500 ரூபா மேற்படி நிதிக்கு அனுப்பிவிட்டார். இன்னும் 500 ரூபாவை விரைவில் அனுப்பிவிடுவதாகவும் தெரிவித்திருக்கிறார். இவருடைய தேசாபிமானமும், பரோபகாரசிந்தையும், தாராள நோக்கமும் நம்மால் பெரிதும் பாராட்டற்பாலன.

லாலா லஜபதிராயின் ஐம்பதாயிரம் ரூபா நன்கொடை:— லாலா லஜபதிராய் லாகூரிலுள்ள தயானந்த ஆங்கிலோ-வேத காலேஜுக்கு ஐம்பதாயிரம் ரூபா நன்கொடை அளித்திருக்கிறார். படித்தவர்களும் தேசாபிமானிகளும் செய்யும் தருமத்திற்கும், தற்பெருமை குறித்தும் காலதேச வர்த்தமானங்களை அனுசரியாமல் முன்னோர் சென்ற வழியையே குருட்டுத்தனமாய்ப் பின்பற்றியும் செய்யப்படும் தருமத்திற்குமுள்ள வித்தியாசம் மலைக்கும் அணுவுக்குமுள்ள வித்தியாசம் போன்றதென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ

தேவகோட்டை.

வைசிய சிவாநந்த சபை:—13—12—13. மாலையில் இச்சபையில் உபந்நியாசங்கள் நடைபெற்றன. ஸ்ரீமத் கெ. திரு. இராமசாமி ஐயங்காரவர்கள் தமக்குத்தேக அசௌக்கிய மாதலால் வர முடியவில்லை என்று தந்தி மூலமாய் அறிவித்ததின் மேல், சபையாரின் வேண்டுகோட்கு இணங்கி பிர்மஸ்ரீ ரெ. இராமமூர்த்தி ஐயரவர்கள் (சொக்கலிங்கம் புத்தூர் மாணிக்கவாசக வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதர்) அக்கிராசனம் வகித்து 'அறிவுடைமை' என்னும் விஷயமாய்க் கேட்டோர் மன முருகும்படி உபந்நியாசித்தார்கள். அதன் பிறகு வேதாரண்யம் ஸ்ரீமத். சுப்பிரமணிய தேசிகரவர்கள் 'மக்கட் பிறப்பின்பயன்' என்னும் விஷயத்தை மிக விளக்கமாகவும் சுருக்கமாகவும் உபந்நியாசித்தார்கள். அதன் பின்னர் 'வைசியமித்திரன்' உதவிப் பத்திரிகாசிரியர் நாகை-வி. கோபாலகிருஷ்ணபிள்ளையவர்களால் 'சிவஞான போதம்' என்னும் விஷயம் உபந்நியசிக்கப் பெற்றது. சபாநாயகரின் அழகிய தொகுப்புரை யோடும், மங்களவாழ்த்தோடும் கூட்டம் இனிது நிறைவேறியது.

பத்திராதிபர்.